**வத்தேகம நகர சபை**

**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வத்தேகம நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உள்ளுராட்சி நிறுவகங்களின் பராமரிப்புப் பிரிவிற்காக தேவையான அடிப்படை இயந்திர உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளராட்சி அமைச்சின் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 35,771,461 பெறுமதியான 04 வாகனங்களின் உரிமை இதுவரை சபையால் உரித்தாக்கப்பட்டிராத போதிலும் இது குறித்து கணக்கீட்டுக் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 பெறவேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,250,468 தொகையானதுடன் அதில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,990,221 ஆகக் காணப்பட்டதுடன் 01 வருடத்திற்கும் 05 வருடங்களிற்கும் இடைப்பட்ட காலத்திற்கும் மேலான கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,075,174 தொகையாகக் காணப்பட்டது. இம் மீதியில் 2016 மே 20 ஆம் திகதி மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 5,591,357 ஆகக் காணப்பட்டது.

**1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலவிய 02 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,431,717 தொகையானதுடன் இதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,076,420 தொகையாகக் காணப்பட்டது. இம் மீதியில் 2016 மே 20 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 3,226,581 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,935,329 ஆகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,680,007 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,744,678 இலான குறைவு ஒன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

(அ) நகர சபையின் நிதி நிலைமை மற்றும் நிதி செயலாற்றல் தொடர்பான முக்கிய விகிதாசாரங்கள் சில பின்வருமாறாகும்.

(i) செயற்பாட்டு வருமான மிகை

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டின் போதுமான நிதி விளைவுகளின் மிகை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாகக்

கருத்திற்கொள்கையில் அந் நூற்றுவீதத்தில் குறைவொன்று காண்பிக்கப்பட்டது.

(ii) மொத்த வருமானமும் மொத்த செலவினமும் ஒப்பிடல்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மொத்த செலவினத்திற்கு மொத்த வருமானத்தின் சதவீதமாகக் கருத்திற்கொள்கையில் அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் இது நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையைக் காண்பித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை முன்னைய ஆண்டிற்கான ஒட்டுமொத்த மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,696,720 தொகையான குறைவு அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக 2015 ஆம் ஆண்டின் 02 வருமான விடயங்கள் குறைவடைந்தமையும், 03 செலவின விடயங்களில் அதிகரிப்பும் அடிப்படைக் காரணமாக இருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறு நிலுவை | எதிர்காலத்தில் பெறப்படுபவை | பட்டியலிடப் பட்டவை | 2015 ஆம் ஆண்டு மிகைக் கட்டணம் | வழங்கப்பட்ட கழிவு/ பதிவழிப்பு | எதிர்காலத்தில் பெறப்படுபவை | 2015 பெறுவனவு குறைவாகக் கிடைக்கப் பெற்றவை | பட்டியலிடப்பட்டவற்றிலிருந்து பெறுவனவு | 2015.12.31 இல் உள்ளவாறு நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 2,354,379 | 7,394 | 3,018,937 | 186,196 | 203,334 | 196,818 | 974,907 | 1,912,678 | 2,279,168 |
| கடை வாடகை | 133,779 | 30,172 | 2,960,203 | 48,110 | 38,610 | 170,781 | 124,210 | 2,738,625 | 100,038 |
| வியாபார அனுமதிப்பத் திரக் கட்டணம் | 4,000 | 4,750 | 718,080 | -- | -- | 3,750 | 4,000 | 719,080 | -- |
| ஏனைய வருமானம் | 3,414,715 | 16,623 | 12,699,218 | 42,175 | -- | 19,112 | 3,617,050 | 8,602,500 | 3,934,068 |
| **மொத்தம்** | | | | | | | | | 6,313,274 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,313,274 தொகையான நிலுவை வருமான மீதி அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 வீத வரி

---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீத வரி மீதி ரூபா 2,354,379 தொகையானதுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பட்டியல் இடப்பட்டவை ரூபா 3,018,937 ஆகக் காண்பட்டன. இதில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டவைகளின் நூற்றுவீதம் 41 சதவீதமாகவும் 63 சதவீதமாகவும் காணப்பட்டமையால் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2,279,168 தொகையான நிலுவை வீத வரி மீதி ஒன்று அவதானிக்கப்பட்டது. அந் நிலுவை மீதியில் 03 மாதங்கள் முதல் 20 வருடங்களுக்கும் மேலான காலப்பகுதியின் போது நிலுவையாகக் காணப்பட்ட வீத வரி ரூபா 2,099,644 தொகையான போதிலும், இது தொடர்பாக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 170(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 22 ஆம் திகதி வரையிலும் 09 அரசாங்க நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான வீத வரி மீதி ரூபா 309,226 ஆகக் காணப்பட்டதுடன் 03 மாதங்கள் முதல் 12 வருடங்களுக்கு இடையிலான காலப்பகுதிக்கு உரித்தாக இந் நிலுவை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதவரி புதிய மதிப்பீடு 2013 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையால் 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டிற்கும் வீதவரி பட்டியல் இடப்பட்டிருந்தது.

**2.3.3 குத்தகை வாடகை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடை வாடகைக்கிடப்படுகையில் குத்தகையாளர்களுடன் ஓர் உடன்படிக்கை இன்றி சபைக்குரிய 07 கடைகள் குத்தகைக்கிடப்பட்டிருந்தன.

(ஆ) பொது சந்தையில் 09 கடைகளும் கந்துரட்ட அபிவிருத்தி வங்கி அமைந்துள்ள சபைக்கு உரித்தான கட்டிடத்தின் மேல் மாடியில் 10 கடைகளுக்காக குத்தகையாளர்களால் குத்தகைத் தொகை தொடர்ந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது தொடர்ந்து மூடிப்பட்டிருந்தது.

(இ) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் மூலம் உறவினர்களுக்கு கடைகளைக் குத்தகை உரிமையை ஒப்படைப்பது தொடர்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் 2010 ஆகஸ்ட் 31 ஆம் திகதி எடுக்கப்பட்ட பொதுக் கூட்டத் தீர்மானத்தின் படி சபைக்குரிய புகையிரத நிலையச் சந்தை வீதியில் 06 ஆம் இலக்க கடை 2010 ஒக்டோபர் 28 ஆம் திகதி மூல குத்தகையாளரின் உறவினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**2.3.4 ஏனைய வருமானம்**

---

(அ) நீர்க் கட்டணம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 2,768,476 தொகையில் 01 வருடம் முதல் 03 வருடங்களிற்கு இடைப்பட்ட காலவீச்சிற்கு உரித்தான நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டணம் ரூபா 377,069 தொகையானதுடன் இத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மங்கல கிரி கந்த மற்றும் புஞ்சி மோல ஆகிய 02 நீர்ச் செயற்திட்டங்களில் நீர்மானி பொருத்தப்பட்டிராததுடன், நீர் நுகர்வோரிடம் ரூபா 200, ரூபா 300, ரூபா 350 அளவில் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. இதனால் நீர்ப் பாவனையாளர்களின் நீர்ப் பயன்பாட்டிற்கு இணையாக கட்டணம் அறவிடப்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாது போயுள்ளது. இவ்வாறே சுத்திகரிக்கப்படாது நீர், பாவனையாளர்களுக்கு வழங்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முச்சக்கர வண்டிக் கட்டணம்

---------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட முச்சக்கர வண்டிக் கட்டணம் ரூபா 378,194 தொகையானதுடன் இத் தொகை 01 முதல் 05 வருடங்கள் அளவிலான கால வீச்சிலும் அறவிடப்படாதிருந்தது.

### 2.3.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமான ரூபா 474,389 தொகை பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது அபிவிருத்தித் தீர்மானங்களைப் பெற்றுக்கொண்டு முன்னுரிமைப் பட்டியலைத் தயாரித்து எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக முறையாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மதிப்பீட்டைப் பெற்று பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கட்டிடத்தை மேம்படுத்துவதற்காகவும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 5,910,000 தொகையாக மொத்தப் பெறுமதி இடப்பட்டு பாதீடு மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு உரித்தான பாதீட்டின் படி, நகர சபை அலுவலகக் கட்டிடமும் மண்டபச் சுற்றாடலில் உள்ள வியாபாரத் தொகுதியுடன் நவீனமயமான நகர சபை மண்டபம் ஒன்றும் சபை மன்று ஒன்றும் நிர்மாணிக்கப்படுவது, பழைய நகர சபைக் கட்டிடம் ஒன்றும் உணவுத் திணைக்களத்தின் புகையிரத சேமிப்புத் தள வளாகத்துடன் ஒன்றிணைந்த முழுமையான வியாபாரக் கட்டிடத்தை ஆரம்பித்தல், புகையிரத நிலையத்தின் அருகாமையில் ஆரம்பிக்கும் புகையிரதப் பாதைக்கு இணையாக மாற்று வழி அபிவிருத்தி செய்தல். குறைந்த வாடகை வீடுகளின் உரிமை குடியிருப்பாளர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக சபை சேதனப் பசளை தயாரிப்பு நிலையம் ஒன்றை ஜயிகா (JAICA) நிறுவகத்தினூடாக பெற்றுக்கொள்வற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது முக்கிய நோக்காகக் காணப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபை நிதியத்தில் செலவினம் ஏற்கப்பட்டு வெளி நிறுவகங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 587,845 தொகை மீள அறவிடப்படாது சபைக்கு முற்கொடுப்பனவாக 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையான காலமாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையில் 08 ஊழியர் பற்றாக்குறையும் 21 மிகைப் பதவிகளும் காணப்பட்டன.

### 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், திட்டம் அங்கீகரிக்கப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதை அடுத்து அவ் வீடுகளில் குடியிருப்பதற்கு முன்னர் இணக்கச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் சபையால் 2010 ஆம் ஆண்டு

முதல் 2015 ஆம் ஆண்டு வரை 269 கட்டிட அபிவிருத்தி அதிகாரப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், இவற்றில் 70 இற்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் படி, இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்படுவது மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 14 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளும் இதற்கு உரித்தான களப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அதிகாரமற்ற 05 கட்டிடங்கள் தொடர்பாக அத்துமீறிய கட்டிடங்களை நிர்மாணித்த நபர்களுக்கு அத்துமீறற் கட்டளை அனுப்பி வைக்கப்பட்டமை தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மூலம் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 158,350 தொகையான பணமும் பொது நிதியத்தில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 120,000 தொகையான பண ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டு சுற்றாடல் நிதி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் இதன் மீதி ரூபா 278,350 தொகையாகக் காணப்பட்டது. இந் நிதியத்தைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது நிதி விளைசவற்றுக் காணப்பட்டது. இத்தகைய நிதி ஸ்தாபிக்கப்படுவதற்காக நகரசபை கட்டளைச் சட்டத்தின் சட்டரீதியான ஏற்பாடு இல்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 03 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 41 சதவீதம் வரையும் 06 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

---

வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

---

2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய சீபீசீ/சீஏஎம்/1/6 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கைக் கடித அறிவுறுத்தலின் படி, ஒவ்வொரு ஆண்டின் காலாண்டின் இறுதியிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக சபையால் ஒரு சந்தர்ப்பத்தின் போது மாத்திரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## 4.4 சொத்து முகாமைத்துவம்

---

**விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது உள்ளூராட்சி அமைச்சிடம் இருந்து அன்பளிப்பாக சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 25,936,884 பெறுமதியான 03 வாகனங்கள் 2015 திசெம்பர் 28 ஆம் திகதி வரையிலும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) “ **எசனின் விஷ்வ கம்மானயக்**” கருப்பொருளின் கீழ் மத்திய மாகாண சபையின் அனுசரணையில் தகவல்தொழில்நுட்ப நிலையம் ஒன்றிற்காக 2014 பெப்ரவரி 25 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 369,873 பெறுமதியான கணனி உதிரிப்பாகங்களும் அலுவலக உபகரணங்களும் எவ்வித பயன்பாடும் இன்றி விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு உதவிச சேவை ஒன்றைத் திட்டமிடுவதற்காக நீண்ட காலமாக சபையால் நடாத்தப்பட்டிருந்த கலை ஒன்றியம் 2014 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டிராததன் காரணமாக ரூபா 193,500 பெறுமதியான இசைக் கருவிகள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) ரூபா 1,984,775 பெறுமதியான 05 வகையான சொத்துக்களும் பெறுமதி இனங்காணப்பட முடியாத நீர் மற்றும் கட்டிட உபகரணங்களும் 07 முதல் 13 வருட காலமாக விளைவற்ற நிலையிலும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

(உ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நீர் செயற்திட்டத்திற்கு உரித்தான 70573431 ஆம் இலக்க இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு மற்றும் 074-2-001-9-5239580 ஆம் இலக்க மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அதன் மீதி ரூபா 117,915 தொகையாகவும் ரூபா 3,371 தொகையாகவும் இருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாடு